## நாமக்கல் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை திரு. க. காஜாமைதீன். எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,

ந.க.எண்.3897/அ1/2015 நாள் 13 .11.2015

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம், திருச்செங்கோடு, திருமதி.அ.க.தௌலத்பானு, தட்டச்சர் என்பாருக்கு தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பாக.

பார்வை 1) நாமக்கல் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.2938/அ1/2015, நாள்.24.08.2015

2) திருச்செங்கோடு உதவி தொடக்கக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.929/அ1/2015, நாள்.20.07.2015.

––

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் திருமதி.அ.க.தௌலத்பானு என்பாருக்கு தட்டச்சர் பதவியில் நியமன ஆணையில் குறிப்பிட்டுள்ள சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் நிலுவையாக உள்ள நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பிற்கு உட்பட்டு அன்னார் பணியில் சேர்ந்த நாளான 25.02.2013 முற்பகல் முதல் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனை</u>

1) அன்னார் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிக்காண் பருவக்காலத்தை முடிக்க வேண்டும்.

2) நியமன ஆணை பத்தி 6ல் குறிப்பிட்டுள்ளவாறு வேலை வாய்ப்பு பதிவு அட்டையினை நீக்கறவு செய்யப்பட வேண்டும்.

மேலும் சம்மந்தப்பட்ட பணியாளருக்கு தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் அன்னாரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் செய்யுமாறும், பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்புமாறும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13.11.15

மாவட்டக் கல்வி அலுவலர்,
நாமக்கல்.

13/11/15

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு மற்றும்
அசல் கல்விச் சான்றுகள் பெறப்பட்டவாறு.

பெறுதல்

சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல் – உதவி தொடக்கக் கல்வி அலுவலர், திருச்செங்கோடு

நகல் – நாமக்கல் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலருக்கு அன்புடன் அனுப்பப்படுகிறது.

நகல் – கோப்பிற்கு.